| | |
|---|---|
| InOP No. | 31/2015(PW1) |
| நாள் | 01.04.2026 |
| பெயர் | லட்சுமி |
| கணவர் பெயர் | கோவவிந்தராஜ் |
| வயது | 55 |

**1 மற்றும் 2 பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

வழக்கு சொத்து காஞ்சிபுரம் டவுன் நெல்லுக்காரர் தெரு தற்போது அன்னை இந்திரா காந்தி சாலை என்ற முகவரியில் உள்ளது. இந்த சொத்து சம்பந்தமாக காஞ்சிபுரம் நீதிமன்றத்தில் மொத்தம் மூன்று வழக்குகள் நிலுவையில் உள்ளது. இந்த வழக்கை நீதிமன்ற கட்டணம் கட்ட வசதி இல்லை என்று 2015ல் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். எனக்கு ஒரு மகன் மற்றும் ஒரு மகள் இருக்கிறார். என்னுடைய மகன் தற்போது சென்னையில் படித்து வருகிறார். அவருக்கு தற்போது 26 வயது ஆகிறது. என்னுடைய மகனின் பெயர் யோகேஷ். அவருக்கு திருமணம் செய்யவில்லை என்றால் சரிதான். என்னுடைய மகன் குவைத்தில் பணிபுரிந்து வருகிறார் என்றால் தவறு அவர் சென்னையில் படித்து வருகிறார். என்னுடைய மகன் சென்னையில் பகுதி நேரம் பணி செய்து வந்தார். ஒன்றாவது எதிர்மனுதாரர் என்னுடைய வீட்டிற்கு பக்கத்து வீட்டில் குடி இருக்கிறார் என்றால் சரிதான் அவர் வாடகைக்கு குடி இருக்கிறார். வாடகை ஒப்பந்தம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. அவர் வாடகை பணம் செலுத்தியதற்கான ஆதாரம் தாக்கல் செய்யவில்லை. வாடகை

அவர் கொடுப்பதில்லை. ஆறு மாதங்கள் தான் வாடகை கொடுத்தார். என்னுடைய மகள் பெயர் ஜெயஸ்ரீ. அவருக்கு திருமணம் ஆகிவிட்டது. என்னுடைய மகள் திருமணத்திற்கு நான் எதுவும் செலவு செய்யவில்லை. மாப்பிள்ளை வீட்டில் செலவு செய்தார்கள். என்னுடைய கணவர் பெயர் கோவிந்தராஜுலு. அவர் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறார் என்றால் சரியல்ல அவர் டயர் கடையில் வேலை செய்து வருகிறார். அவர் டயர் ரீடைல் கம்பெனி நடத்தினார் என்றால் 15 ஆண்டுகளுக்கு முன்பு நடத்தினார். நஷ்டம் ஏற்பட்டதால் மூடிவிட்டார். என்னுடைய இடத்தில் ஒரு போர்ஷனில் சலாம் பிரியாணி என்ற கடைக்கு நாங்கள் வாடகை கொடுத்துள்ளேன் என்றால் இல்லை. இரண்டடி வழியில் அவர் ஸ்டூலும் டேபிளும் போட்டு வைத்துள்ளார். இதை தவிர சூர்யா மெஸ் என்ற கடைக்கு வாடகைக்கு கொடுத்தேனா என்றால் ஆறு மாதங்களுக்கு வாடகைக்கு விட்டேன். அதன் பின்பு காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததால் அந்த கடையை எடுத்து விட்டார்கள். இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பு கடை எடுக்கப்பட்டது எந்த ஆண்டு கடை எடுக்கப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியவில்லை. ஊத்துக்காடு கிராமத்தில் எனக்கு சொந்தமான நிலங்கள் உள்ளது. அது என்னுடைய தனிப்பட்ட சொத்து அல்ல என்னுடைய குடும்ப சொத்து ஆகும். அது ஒரு ஏக்கர் என்பது சென்ட் இருக்கும். அந்த நிலம் சம்பந்தமாக 15 ஆண்டுகளாக வழக்கு உள்ளது. அந்த வழக்கின் விவரங்கள் சொல்ல முடியுமா என்றால் தெரியவில்லை. அம்பியில் எனக்கு சொந்தமான வீடு உள்ளதா என்றால் எனக்கு சொந்தமான வீடு இல்லை. என் வீட்டில் இரண்டு மோட்டார் சைக்கிள் உள்ளது என்றால் இல்லை. ஒரு ஸ்கூட்டி தான் உள்ளது. என்னுடைய மகன் கார் வைத்துள்ளார் என்றால் இல்லை. தினசரி செலவுகள் எவ்வாறு செய்து வருகிறேன்

என்றால் என்னுடைய மகள் மாதாமாதம் பணம் தருகிறார். நான் சுற்று வட்டாரத்தில் வட்டிக் கொடுத்து வருகிறேன் என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்த காலகட்டத்தில் வருமானம் இல்லை என்று சொல்லிவிட்டு நீதிமன்ற கட்டணம் செலுத்தாமல் இருப்பதற்கு விளக்கு கேட்டுள்ளேன் என்றால் சரிதான். அந்த காலகட்டத்தில் தாசில்தார் இடம் நில் இன்கம் சர்டிபிகேட் வாங்கி நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. தாவா சொத்து சம்பந்தமாக எங்களுக்குள் மூன்று குற்ற வழக்குகள் நிலைமையில் உள்ளது என்றால் சரியல்ல. ஒரு குற்ற வழக்கு நிலுவையில் உள்ளது. மீதமுள்ள வழக்குகளில் நான் வாதியா அல்லது பிரதிவாதியா என்றால் என் மீதுதான் வழக்கு போட்டுள்ளார். அந்த வழக்குகளுக்கான வழக்கறிஞருக்கு நான் பீஸ் கொடுத்தேனா என்றால் நான் பீஸ் எதுவும் கொடுக்கவில்லை அவர் இலவசமாக நடத்தி வருகிறார். எனக்கு பணம் செலுத்த வசதி உள்ளது என்றும், நான் வழக்கிற்காக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் போட்டிருக்கும் செயின் மற்றும் தோடு தங்கத்தில் ஆனதா என்றால் செயின் தங்கம் தான் ஆனால் அது என்னுடைய மகளின் செயின் ஆகும். நீதிமன்ற கட்டணத்தை செலுத்தாமல் இருப்பதற்காக நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

(Sd/- Deepthi Arivunithi, M.L.,)
Principal District Judge,
Kancheepuram.